## IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.231/2017 Date: 07.11.2024.

PW1-கந்தசாமி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தானது கடந்த 09.11.2016 அன்று கொங்கணாபுரத்தில் இருந்து ஓமலூர் செல்லும் சாலையில் நான் TVS XL இருசக்கர வாகனத்தில் என் வீட்டிற்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரில் வந்த ஆம்னி கார் என் மீது மோதியது. அப்போது நேரம் காலை சுமார் 06.00 மணியிருக்கும். விபத்து நடந்த இடத்தில் ரோடு தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். என் வீடு சாலையின் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து என் வீட்டிற்கு செல்வதற்காக மேற்கு நோக்கி திரும்பிய போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் நான் சாலையை கடந்து மண் ரோட்டிற்கு சென்ற பிறகு தான் கார் என் மீது மோதியது. விபத்து நடந்த இடத்தில் 100 மீ தொலைவில் வாகனம் வருவதை என்னால் பார்த்திருக்க முடியும் என்றால் சரிதான். நான் சாலையை கடப்பதற்கு முன்பு எதிரில் வந்த வாகனத்தை பார்க்காமல் கடந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் 50 மீ தொலைவில் வரும் போதே பார்த்துவிட்டேன். அப்போது அந்த வண்டி எவ்வளவு வேகத்தில் வந்தது என்றால் அதிவேகமாக தான் வந்தது. நான் வேகமாக வரும் வண்டியை பார்த்துவிட்டு சாலையை கடக்காமல் இருந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். நானும் அவசரப்பட்டு சாலையை கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்தின் போது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது விபத்தின் போது தொலைந்துவிட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதேபோல் நான் தலைகவசமும் அப்போது அணியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது பூராண குணமாகிவிட்டது என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு எந்த நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வேலை, வயது, வருமானம் ஆகியவற்றை

காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு என்னுடைய கவனகுறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல.

Sd/-கந்தசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.